மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது பற்றித் தனியாக ஒரு கோரிக்கை அரசுக்குக் கொடுத்தால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

14—

நீதிமன்ற வளாகம்

***60747—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் தனி நீதிமன்ற வளாகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தப்பட்ட விடையினைப் படிக்கத் தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன். ஓமலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க 16-4-2010 அன்று 303.20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 23-5-2010-இல் ஓமலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று, தற்போது பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் நீதிமன்றம் சுதந்திரம் அடைந்த காலத்திற்கு முன்பே தொடங்கப்பட்ட நீதிமன்றம். எனவே, தொடர்ந்து நானும், பகுதி

2010 நவம்பர் 10]

மக்களும், பகுதி வழக்கறிஞர்களும் இந்தப் பகுதியிலே தனி நீதிமன்ற வளாகம் துவக்கப்பட வேண்டும் என்று சட்டப் பேரவையிலும், அமைச்சரிடத்திலே கடிதத்தின்வாயிலாகவும் கொடுத்ததன் அடிப்பண்டையிலே கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே சட்டத் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்பொழுதே முதல் அறிவிப்பாக ஓமலூரிலே தனி நீதிமன்ற வளாகம் தொடங்கப்படும் என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல், அங்கே அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் வருகை தந்து அதற்கு அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்கள். அதற்காக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தொகுதி மக்களின் சார்பாக இந்த அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையிலே, உறுப்பினர்கள் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அண்ணன் திரு. கோ.க. மணி மற்றும் அண்ணன் திரு. ஞானசேகரன் உட்பட பல்வேறு உறுப்பினர்கள், இதைப்போன்ற நீதிமன்றத் துவக்க விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்து இங்கு பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 'அது பரிசீலனை செய்யப்படும்' என்று சொன்னார்கள். ஆனால் ஓமலூர் நீதிமன்ற வளாக விழாவிற்கு அப்பகுதி சட்டமன்ற உறுப்பினராகிய எங்களைப் போன்றவர்கள் அங்கு அழைக்கப்படவில்லை. இதனால் இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று எண்ணுகிற ஒரு நிலை மக்கள் மத்தியிலே இருக்கிறது. எனவே, என்னுடைய தொகுதி என்பது மட்டுமல்லாமல், தமிழக அளவிலே எங்கு நீதிமன்றங்கள் தொடங்கினாலும், அந்த நீதிமன்றங்கள் தொடக்க விழாவிலே சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதற்கான ஒரு முயற்சியை, ஒரு சட்டமாக மாண்புமிகு அமைச்சர் நிறைவேற்றித் தருவாரா எனத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றம் வர வேண்டும் என்று எவ்வளவு

அக்கறையோடு பாடுபட்டேன் என்று சொன்னார். அவர் கோரிக்கையை ஏற்று நீதிமன்றத்தைக் கொண்டுவந்து, துவக்க விழாவையும் நடத்தி, பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த விழா அழைப்பிதழிலே அவர் பெயர் போட்டிருப்பதாகத்தான் எனக்கு ஞாபகம். (குறுக்கீடு) எப்படி இருந்தாலும், அவர் என்னிடத்திலே, சேலத்திலே வந்து ஒரு நன்றி தெரிவித்திருக்கலாம்; 'விழாவிற்கு வந்திருக்கிறீர்கள், என்னால் வர முடியவில்லை' என்று. பல ஊர்களிலே விழாவிலே பெயர் போட முடியாவிட்டாலும், அந்த விழாவிற்காகப் பாடுபட்டவர்கள், அந்தந்த விழாக்களிலே வந்து அமர்ந்திருக்கிறார்கள். தாம்பரத்திலே ஒரு விழா இதேபோல். உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பெருமுயற்சி எடுத்தார்கள். ஒவ்வொரு தொகுதியிலேயும் நீதிமன்றம் வருவதற்கு அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-க்கள்தான் பெருமுயற்சி எடுக்கிறார்கள் என்பதை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த விழாவிற்கு அவர் அழைக்கப்படாவிட்டாலும், விழாவிற்கு வந்து சிறப்பித்தார். மேடையிலேயே நான் பேசுகிறபொழுது, அதே கருத்தைதான் சொன்னேன். "இங்கு உட்கார்ந்திருக்கும் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்தான் இந்த நீதிமன்றம் வருவதற்கு பெருமுயற்சி எடுத்தார்; ஆனால் அவருக்கு, இந்த மேடையிலே வருவதற்கு வாய்ப்பில்லை. எனவே, நீதிபதிகள் இதைக் கவனிக்க வேண்டுமென்று" அவர்களுக்கு அறிமுகம் செய்துவிட்டு, திரு. எஸ்.ஆர். இராஜாவைப் பாராட்டினேன். அப்படி திரு. அ. தமிழரசு அவர்கள் அன்றைக்கு வந்திருந்தால், எனக்கு நன்றியை அவர் சொல்வதற்குப் பதில், அவரை நான் பாராட்டியிருப்பேன். ஒரு கருத்தை நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். மாறுபட்ட கருத்து எனக்கில்லை. நூறு தரம் இதைச் சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும் 'நாம்தானே நிதியைக் கொடுக்கிறோம்; High Court-க்கு, அந்த நிதியை நிறுத்தினால் என்ன? என்றுகூட ஒரு கேள்வியாகக் கேட்டார். அந்த அளவுக்கு பெரும் முயற்சி எடுத்து நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நீதிபதிகள்தான் நமக்கு ஆணை போடுகிறார்களே தவிர, நாம் நீதிபதிக்கு ஆணை போட முடியவில்லை. இன்றைக்கும் இந்த மன்றத்தினுடைய ஒட்டுமொத்தமான அந்தக் கோரிக்கையை நீதிமன்றம் கவனிக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்தின் வாயிலாகவே கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்தைப் புதிதாக வந்திருக்கும்

2010 நவம்பர் 10]

தலைமை நீதிபதி—இன்னும் இரண்டொரு நாளில் பார்க்க உள்ளேன்—அவரிடத்திலேயே தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பதிலுரைக்கு மீண்டும் நன்றியினைக் கூறிக்கொண்டு, ஓமலூரிலே தற்போது குற்றவியல் மற்றும் நீதித் துறை நடுவர் நீதிமன்றம் மட்டுமே இயங்கி வருகிறது. இந்த நீதிமன்றத்தில் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் ஒன்றாகவே ஒரே நீதிபதியால் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் நாளதுவரை சுமார் 4,000 சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தேக்க நிலையில் உள்ளன. இவை இல்லாமல் மேட்டூர் சிவில் மற்றும் சார்பு நீதிமன்றத்தில் ஓமலூர் தாலுகா பகுதி வழக்குகள் சுமார் 75 சதவிகிதத்திற்கு மேல் நடந்து வருகின்றன. எனவே, இத்தகைய எல்லா வழக்குகளையும் ஓமலூரிலேயே விரைவில் நடத்தி முடிக்கவும்—ஓமலூர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கு பதினான்கு ஆண்டுக் காலமாக நிலுவையில் இருப்பதாக வழக்கறிஞர்கள் சொல்கிறார்கள். எனவே, ஓமலூர் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை முடிக்கவும்—ஓமலூர் தாலுகா நீதிமன்றத்திலிருந்து பிரிந்து சென்ற மேட்டூர் நீதிமன்றத்தில் உள்ள குற்றவியல் நீதிமன்றம் 1, குற்றவியல் நீதிமன்றம் 2 மற்றும் முன்சீப் கோர்ட் 1, சப்-கோர்ட் 1 என உள்ளதுபோல் ஓமலூர் தனி நீதிமன்ற வளாகத்திலும் புதிய நீதிமன்றங்களை அமைத்து அனைத்து வழக்குக்ளையும் விரைவில் முடிக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஊரிலேயே எல்லா நீதிமன்றங்களும் கொண்டு வந்து, clients அனைவரும் வர வேண்டுமென்கிறார். உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, அவையில் இல்லை. இருந்திருந்தால் அவரிடம் மேட்டூர் பற்றிக் கேட்டிருக்கலாம். பரவாயில்லை. வழக்குகள் தேங்கி இருக்கின்றன என்று சொல்கிறார், அந்த வழக்குகள் தேங்கி

[2010 நவம்பர் 10

இருப்பதை விரைவாக முடிக்க வேண்டுமென்பதற்காக, உயர் நீதிமன்றத்திலிருந்து என்னென்ன யோசனைகளை அரசுக்கு தெரிவித்தார்களோ, அவற்றையெல்லாம் இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது. இந்த அரசு 300 கோடி ரூபாய்க்கு மேல், இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் செலவு செய்யப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில், 300 கோடி ரூபாயைத் தாண்டி இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சுமார் 47 புதிய நீதிமன்றங்களுக்கு கட்டடங்களும், 46 இடங்களில் நீதிபதிகளுக்கு குடியிருப்புகளும், புதிய நீதிமன்றங்களும் இன்றைக்கு நிறைய கட்டிக்கொண்டிருக்கிறோம். 2007-2008 ஆம் ஆண்டு—இவை மட்டுமல்லாமல், High Court-ல், வேகமாக வழக்குகளை முடிக்க வேண்டுமென்பதற்காக, 45 நீதிபதிகள் இருந்த இடத்தில் 60 நீதிபதிகளாக உயர்த்திக்கொள்வதற்கு அனுமதியளித்திருக்கிறோம்.

தமிழ்நாட்டிலே மகளிர் நீதிமன்றங்கள் 9-ஐ, சென்னை, சேலம், கோவை, நெல்லை, மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், செங்கல்பட்டு ஆகிய இடங்களில் உருவாக்கியிக்கிறோம். ஆறு குடும்ப நல நீதிமன்றங்களை உருவாக்கியிருக்கிறோம். வேகமாக வழக்குகள் முடிய வேண்டுமென்பதற்காக, 56 மாலை நேர நீதிமன்றங்களை உருவாக்கியிருக்கிறோம். அவை மட்டுமல்லாமல், இன்னும் சொல்ல வேண்டுமென்றால் நீதிமன்றம், எது எதற்கு நிதி தேவை என்று சொல்கிறதோ அதை நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனாலும், சில நேரங்களிலே வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்பதை, நாம் அல்ல, சமீபத்திலே உயர் நீதிமன்றத்தில் ஒரு விழாவில் பேசுகிறபொழுது, சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களே தெரிவித்தார்கள். ஒரு வழக்கு ஓர் ஆண்டுக் காலம் இருந்தது என்று சொன்னார். இது வியப்பல்ல. இங்கு அல்ல, Supreme Court-ல், ஒரு வழக்கை விசாரித்து விட்டு, Judgement reserved என்று சொல்லிவிட்டு இரண்டு ஆண்டுக் காலம் பொறுத்து நீதியுரைத்தார்கள், வீட்டிற்குப் போவதற்கு முன் நாள். 'நிலம் வாங்குவது தப்பு இல்லை, அரசு நிலத்தை வாங்குவது தப்பு இல்லை' என்று வீட்டிற்குப் போவதற்கு முன் நாள் ஒரு நீதிபதி சொல்லிவிட்டு வீட்டிற்குப் போய் விட்டார்.

2010 நவம்பர் 10]

இரண்டு வருடம் Judgement Reserved-ல் இருந்தது. ஆகையினால். . . (குறுக்கீடுகள்) இல்லை, பொதுவாக எல்லா வழக்குகளும் அப்படித் தேங்கியிருக்கின்றன என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) Particular-ஆக சொல்லவில்லை சார். பல வழக்குகள் இப்படித் தேங்கி இருக்கின்றன என்று சொல்கிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது. . . (குறுக்கீடுகள்) One minute, one minute. உங்களுக்கு இதில் எந்த விதத்தில் பாதிப்பு இருக்கிறது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Speaker sir, (குறுக்கீடு) Speaker sir, அப்படி இரண்டு ஆண்டுக் காலம் Judgement Reserved ஆகி இருந்தது, என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் பீகாரில் ஒரு வழக்கு என்று நான் நினைக்கிறேன். எனக்கு particular—ஆக இப்போது தெரியவில்லை. (குறுக்கீடுகள்) இவர்களுக்கு என்ன பிரச்சினை என்று தெரியவில்லையே? (குறுக்கீடு) உங்களுக்கு அப்படி ஒரு வழக்கு இருக்கிறதா என்ன? (குறுக்கீடு) எனக்குத் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவரை நான் கேட்கிறேன், அவர் பதில் சொல்கிறார், அதிலே உங்களைப்பற்றி அவர் எதுவும் mention செய்யவில்லையே? உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களைப்பற்றி mention செய்யவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இல்லை, இல்லை. (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்றால் இப்போதுகூட சொல்கிறேன், நான் படித்த பீகார் வழக்கை ஞாபகம் வைத்துச் சொன்னேன். ஆனால் நீங்கள் ஏதோ ஒரு வழக்கை நினைக்கிறீர்கள். அது என்னவென்று சொன்னீர்கள் என்றால் அதுவும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் காலதாமதத்திற்கு நீங்கள் காரணம் என்று அவர் சொல்லவில்லையே! (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) நான் உங்கள் பக்கமே திரும்பவில்லையே!

[2010 நவம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி. (குறுக்கீடு) திரு. ராம. சுப்புராம்.*

திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடமான திருமயத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு கடந்த ஆண்டே நிதியொதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளியும் விடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இன்னும் பணி தொடங்கப்படாமல் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக அந்தப் பணியைத் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அப்படி ஆவன செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை என்னவென்று விசாரித்து விரைவாக அந்தப் பணி நடைபெற அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.*

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் அமைப்பது குறித்து தொடர்ந்து இந்த அவையிலே கேள்விகள் கேட்கப்படுகின்றன. நானும் ஓராண்டுக் காலமாக மாண்புமிகு அமைச்சரிடத்திலே, மன்னார்குடியிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறேன். அதற்கான இடமும், அங்கே தேவையான அளவுக்கு இருக்கிறது. அரசின் சார்பிலான இடங்கள் இருக்கின்றன. அதை ஆய்வு செய்வது 'நீதிமன்றம்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற முறையும் சொன்னார்கள். அதைத் துரிதப்படுத்தி, ஆய்வு செய்து மன்னார்குடியிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான முயற்சிகள் இந்த ஆண்டே மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

2010 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் இதுகுறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக்கூட கொடுத்திருப்பதாக எனக்கு file வந்திருக்கிறது. மன்னார்குடியில் இருக்கின்ற நீதிமன்றங்கள் மிகப் பழமையான நிலையில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை உயர் நீதிமன்றத்திற்கும் தெரிவித்து, அரசினுடைய கவனத்திலே அதைக்கொண்டு, இந்த ஆண்டு முடியும் என்றால் முடியும், இல்லாவிட்டால் அடுத்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப அரசு எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியில் நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நீதிமன்ற வளாகம் கட்டுவதற்காக சாத்தான்குளம் கிராமம், சர்வே எண் 490-ல் ஒரு ஏக்கர் நிலம் இடம் ஒதுக்கி மூன்று ஆண்டுகளாகின்றன. ஆனால், இதுவரையிலும் நிதியொதுக்கீடு செய்யப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையான நிதியை இந்த ஆண்டில் ஒதுக்கீடு செய்து நீதிமன்றம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிமன்றம் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கினாலும் அந்த இடத்தை, உயர் நீதிமன்றம்தான் தேர்வு செய்ய வேண்டும். எந்த இடத்தில் கட்டுவது என்பதை உயர் நீதிமன்றம் முடிவு செய்யும். பிறகு, அதை blue print-உடன் இங்கே அனுப்புவார்கள்; பிறகு plan போட்டு அனுப்புவார்கள். அதையும் அவர்கள்தான் முடிவு செய்வார்கள். எனவே ஒரு திட்டம் நிறைவேற வேண்டுமென்றால் உயர் நீதிமன்றத்திலிருந்து முழு ஒப்புதல் கிடைத்த பிறகு, நாங்கள் நிதி ஒதுக்கியிருந்தாலும்கூட பிறகுதான்

எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை என்னவென்பதை நான் தனிக் கவனம் செலுத்திப் பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *15*, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர்.கே. நரசிம்மன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

15—

பேருந்து வசதி

***115316—திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரியிலிருந்து சென்னைக்கு போச்சம்பள்ளி வழியாக இயக்கப்படும் பேருந்து வசதிகள் போச்சம்பள்ளி, சென்னை பயணிகள் பயன்படுத்திக்கொள்ள போதுமானவையாக உள்ளன. போச்சம்பள்ளியிலிருந்து சென்னைக்கு செல்லும் நேரடிப் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது போச்சம்பள்ளி—சென்னை தடத்தில் புதிய பேருந்து இயக்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்.

திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டத் தலைநகரமாகும். இது தமிழகத்திலே அதிகமாக உற்பத்தியாகும் மா விளைச்சலின் வர்த்தக ஸ்தலமாகும். தமிழகத்திலே இயங்கி வரும் வாரச் சந்தைகளில் மிகப் பெரிய இரண்டாவது வாரச் சந்தை ஞாயிறுதோறும் நடைபெறுகிறது. மாண்புமிகு முத்தமிழறிஞர்